09.10.2025 Mcop 296/2023 ம.சா.1 அருண்குமார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2ம்எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்தின் போது இருசக்கர வாகனத்தில் நான் பின்னால் அமர்ந்து சென்றேன். மொத்தம் இருசக்கர வாகனத்தில் 3 பேர் சென்றோம் என்றால் சரியல்ல. 2 நபர்கள் தான் சென்றோம். விபத்து சம்பந்தமாக நான் தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரும், முதல் தகவல் அறிக்கையில் உள்ள விபரங்கள் சரியானது என்றால் சரிதான். விபத்திற்கு காரணம் எனது வாகனத்தை ஓட்டி சென்ற நபர் என்றும், அவர் தான் முன்னால் சென்ற லாரியை முந்தி சென்று இந்த 1ம் எதிர்மனுதாரர் ஓட்டி சென்ற வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டார் என்றால் சரியல்ல. விபத்திற்கு நான் பயணம் செய்த இருசக்கர வாகனத்தின் ஓட்டுனர் காரணம் என்பதால் 2ம்எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தற்போது நான் அரசு பேரூந்தில் நடத்துனராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் சாதாரண காயங்கள் என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நான் கோரியுள்ள இழப்பீடு தொகை எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி.
தென்காசி.